**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 113/2022 தேதி- 17.03.2026
(PW.1) – ஜெயசிங்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் வழிப்பாதை கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வழிப்பாதையாக கோரும் பகுதி 1வது பிரதிவாதியின் பட்டா சொத்தின் ஒரு பகுதியில் உள்ளது என்றால் சரிதான். சொத்தின் சர்வே எண் என்ன என்றால் என்னுடைய சொத்தின் சர்வே எண்.503/5A ஆகும். அதனுடைய மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 87.500 சென்ட் ஆகும். அதனுடைய பழைய புல எண் என்ன என்றால் நினைவில் இல்லை.

2.நான் எதன் அடிப்படையில் 1வது பிரதிவாதியிடம் வழிப்பாதையில் உரிமை கோருகிறேன் என்றால் எனக்கு விலைக்கு கொடுத்த நபரான ரிச்சர்ட்ஸ் ஸ்வர்ணா என்பவர் நான் வழக்கில் கோரும் வழிப்பாதையை பயன்படுத்தி வந்தார். அதன் அடிப்படையில் நான் வழிப்பாதை கோருகிறேன். ரிச்சர்ட்ஸ் ஸ்வர்ணாவிற்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் விஜயன் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினார். நான் தாக்கல் செய்த நிரூபன வாக்குமூலத்தில் **பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம் கிடக்கும் எனது சகோதரன் செல்லையனுக்கு உரிமைப்பட்ட சொத்தில் கூடி பட்டிகை சொத்திற்கு நான் செல்லும் பாதையில் கூடி தாங்களும் போக்குவரத்து செய்து கொள்ள வேண்டியதுமாகும்** என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3.அவ்வாறு சொல்லியுள்ள நிலையில் அந்த பாதையின் அளவோ, நீளமோ, சர்வே எண்ணோ குறிப்பிடவில்லை என்றால் பழைய ஆவணத்தில் ஒரு வைக்கோல்போர் கொண்டு செல்லும் பாதை அளவு என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்சொன்ன பழைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. செல்லைய்யன் சொத்தின் வழியாக செல்வதற்கு பாதை உள்ளது என்று எழுதிக் கொடுத்த ஆவணத்தில் செல்லைய்யனை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

4.செல்லையய்ன் கட்சியாக சேர்ந்து எழுதப்பட்ட ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய ஆவணத்தில் பட்டிகை சொத்தின் போக்குவரத்திற்கு வசதிக்காக எங்களில் 1ம் நபரும் தும்பக்கோடு வயலில் வீட்டில் எஸ். கெங்காதரன் நாயர் என்பவருமாக செய்துள்ள பாதை ஒப்பந்தத்தின் படியும் என்று சொல்லப்பட்டுள்ள நிலையிலல் அந்த பாதை ஒப்பந்தத்தில் யாரெல்லாம் கட்சி என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த பாதை ஒப்பந்தத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5.அந்த பாதை ஒப்பந்தத்தில் என்ன சர்வே எண். குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த பாதையின் மொத்த நீள, அகல அளவுகள் மற்றும் எங்கிருந்து தொடங்கி எங்கு முடியும் என்று எனக்கு தெரியாது என்றால் உத்தேசமாக 200 அடிக்கு மேல் நீளம் இருக்கும், கெங்காதரன் நாயரின் சொத்தில் இருந்து, என்னுடைய சொத்து வரை இருக்கும். கெங்காதரன் நாயரின் சொத்து என்னுடைய சொத்திற்கு எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கு பக்கம் உள்ளது. என்னுடைய சொத்தின் எல்கை என்ன என்றால் வடக்கு பக்கம் குயிலோடு எஸ்டேட், கிழக்கு பக்கம் பாலையன் சொத்து, மேற்கு பக்கம் C.B.பாலசந்திர நாயர் சொத்து, தெற்கு பக்கம் கெங்காதரன் நாயரின் சொத்தும் உள்ளது.

6. வழக்கு A மற்றும் B பட்டிகை சொத்தை ரிச்சர்ட்ஸ் ஸ்வர்ணா என்பவரிடமிருந்து தான் முதலில் கிரயம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ரிச்சர்ட்ஸ் ஸ்வர்ணா எழுதிக் கொடுக்கும் போது பாதை அவகாசம் வழங்கியிருந்தால் ஏதாவது எல்கையில் குறிப்பிட்டு சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. பொதுப்பாதையாக சொல்லப்படுவது B பட்டிகை சொத்தின் தெற்கு பகுதியில் சுமார் 5.50 மீட்டர் அளவில் ரோடாக போடப்பட்டுள்ளது என்றாலும், அதை தான் பாதையாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று முன் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது பொது பாதையாகும், அது என் தோட்டத்திற்கு செல்லும் பாதையல்ல.

7.A பட்டிகை சொத்திற்கும் B பட்டிகை சொத்திற்கும் சுமார் 12 அடி உயரம் இருக்கும் என்றால் சரிதான், ஆனால் ஏற்கெனவே பயன்படுத்திய வந்த பாதையை பிரதிவாதிகள் சேதப்படுத்திவிட்டார்கள். மேற்சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், ஏற்கெனவே அந்த இடத்தில் பிரதிவாதிகள் இரப்பர் மரங்கள் நடப்பட்டு இருந்தது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. B பட்டிகை சொத்தின் எல்கைகள் அனைத்தும் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், என்னுடைய வழிப்பாதையை அடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

8.முள்வேலி அமைத்த சமயத்தில் நான் புகார் எதுவும் அளித்தேனா என்றால் நான் குலசேகரம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த புகாரும் அளிக்கப்படவில்லை என்றாலும், பிரதிவாதியின் முன்ஜென்மி அமைந்திருந்த முள்வேலி என்றால் சரியல்ல. நான்கு பக்க எல்கையை முறையாக அளவீடு செய்யப்பட்டு தான் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றாலும், அதனால் தான் அருகாமையில் சொத்தின் உரிமையாளர்கள் எவ்வித புகாரும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல, எனக்கு வழிப்பாதையை தரக்கூடாது என்று முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

9.வழக்கின் B மற்றும் C பட்டிகை சொத்து 1வது பிரதிவாதிக்கு முழு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு மேற்சொன்ன சொத்தில் எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரிதான். நான் தேவையில்லாத நபர்களை கட்சியாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. செல்லையனை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கெங்காதரன் நாயரை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றாலும், கெங்காதரன் நாயருடன் போடப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள நபர்கள் யார் என்று சொல்லப்படாமலும், அவர்களை கட்சியாக சேர்க்கப்படாமலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை, கெங்காதரன் நாயர் இறந்துவிட்டார்.

10. கெங்காதரன் நாயர் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகளை கட்சியாக வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).